2015 பிப்ரவரி 18]

5—

சொந்தக் கட்டடம்

*49728—**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, பி.என். பட்டி பேரூராட்சி, 4-வது வார்டு, துறையூர் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் வெற்றி! எதிலும் வெற்றி! எப்போதும் வெற்றி! (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிச் சரித்திரம் படைத்திட்ட எங்கள் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, பி.என். பட்டி பேரூராட்சி, 4-வது வார்டு, துறையூர் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் தேர்வு செய்யப்பட்டு அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூர் சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் 278 அங்கன்வாடி மையங்கள் உள்ளன. இவற்றில், 158 அங்கன்வாடி மையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 120 அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. சட்டமன்ற

உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 23 அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் மீதமுள்ள அங்கன்வாடி மையங்கள் பழுதடைந்திருப்பதால், குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருக்கின்றார்கள். எனவே, அந்த அங்கன்வாடி மையங்களுக்கும் சொந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறு. அங்கன்வாடி மையங்கள் பழுதடைந்த நிலையில் இருக்குமானால், அந்த அங்கன்வாடி மையங்களை நல்ல நிலையிலுள்ள கட்டடங்களுக்கு மாற்றி, குழந்தைகளைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துத்தான் அங்கன்வாடி மையங்கள் பராமரிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பி.என். பட்டி பேரூராட்சி, 4-வது வார்டு, துறையூர் பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வெகு விரைவிலே பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், மேட்டூர் தொகுதியிலே மேச்சேரி, நங்கவள்ளி, கொளத்தூர் ஆகிய மூன்று வட்டாரங்கள் உள்ளன. மேச்சேரியில் 22 அங்கன்வாடி மையங்களுக்கும், நங்கவள்ளியில் 22 அங்கன்வாடி மையங்களுக்கும் என 44 அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

2015 பிப்ரவரி 18]

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கும் கொளத்தூர், மேச்சேரி போன்ற பகுதிகளில் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. தினமும் கான்கிரீட் கூரைகள் விழுந்து கொண்டிருப்பதால், அங்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, விரைந்து நடவடிக்கை எடுத்தால், குழந்தைகளின் உயிர் பாதுகாக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கொளத்தூர் பகுதியிலுள்ள அனைத்து அங்கன்வாடி மையக் கட்டடங்களும் பழுதடைந்திருப்பதாகச் சொன்னால், அதை ஏற்றுக்கொள்ள முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கட்டடம் மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கின்ற இந்த அரசு, அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

கலைக் கல்லூரி

***47673—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2015 பிப்ரவரி 18

திருமயம் தொகுதியில் புதிய கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடுகின்ற ஏழைக்கும், வருங்காலத் தலைமுறைக்கும், பூரண ஒளியேற்றும் புண்ணியமே, பூவுலகோர் போற்றிடும் புறநானூற்றுக் காவியமே, பூலோக சொர்க்கமாய் நிருவாகத்தில் புரட்சி செய்த தாயே, உங்கள் அன்புக்கு அசையும் அகிலம், உங்கள் அறிவுக்கு இசையும் இத்தரணி, இருள் விலக்கக் காத்திருக்கும் பொன்னான வேளை காண, ஒன்றரை கோடி சிப்பாய்ப் படையோடு, பத்து கோடி தமிழர்களும், பாசத்தோடு காத்திருக்கும் வேளையில், தாய் வந்து தலைமையேற்க, தவமிருக்கும் தமிழகம் என்பதை ஸ்ரீரங்கம் முன்மொழிந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனை வருங்காலத் தமிழகம் அச்சு பிசகாமல் அப்படியே வழிமொழிவது சத்தியம் என்று சொல்லி, யாரென்றே புரியாத விழியோரையும், ஊர் நின்று பார்க்க வைத்து, இலட்சத்திற்கு மேலான தொண்டர்களுக்கும், பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியம் தந்த தாய் இருக்கும் திசை நோக்கி என் தலைவணக்கம் செலுத்துகிறேன். விழி அசைவில் வெற்றிகளைக் குவிக்கின்ற வீரத்திருமகளின் பொற்பாதம் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில்